இந்தத் திட்டம் ஏறத்தாழ 367 கண்மாய்களுக்குப் பாசன வசதி உண்டு பண்ணக்கூடிய திட்டம். இதனால் 1,02,936 ஏக்கர் பாசன வசதி பெறும்.

குழந்தைகள் பாலுணவு

* 329 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி, திரு. வை. சங்கரன் } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குழந்தைகள் பால் உணவுக்கான பங்கீட்டு முறையை இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து எடுத்துவிட்டது உண்மையா?

(இ) ஆமெனில், பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு விட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No. Sir; but a free sale has been ordered with effect from 1st June 1966, subject to certain conditions.

(b) Yes, Sir.

திரு. ம. கமலநாதன் : சென்னையிலே திறக்கப்பட்டிருக்கும் சூப்பர் மார்க்கெட்டில் குழந்தைகள் உணவு வாங்கச் செல்பவர்கள், அந்தக் குழந்தை உணவுப் பொருளின் விலை என்னவோ அதே அளவுக்கு வேறு பொருள்கள் வாங்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படுவதை அரசாங்கம் அறியுமா ?

(பதில் இல்லை)

திரு. சா. கணேசன் : "Subject to certain conditions" என்று அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டார்கள். அந்தக் கண்டிஷன்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஹோல்சேல் ஆக வாங்கக் கூடியவர்களும், ரீடைலர்சும் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகளை வைத்திருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பு டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் 'அமுல்' போன்ற குழந்தை உணவுப் பொருள்கள் கிடைக்கலாம் என்ற முறை இருந்தது. அந்த முறை மாற்றப்பட்டு இப்போது ஃப்ரீ சேல்ஸ் உத்தரவு வைத்திருக்கும் சமயத்தில் 'அமுல்' போன்றவை கிடைக்காமல் நகரத்தில் ஏராளமான மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்தக் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தக் கஷ்டத்தைப் போக்கத் தான் முன்பு நடவடிக்கை எடுத்தோம். அப்போது அதற்கு எதிர்ப்பு. பொதுவாக, இந்த குழந்தை உணவுப் பொருள்கள்

2nd November 1966]

எல்லாம் பற்றுக்குறையாக இருக்கிறது. இப்போது இருக்கக் கூடிய குறைபாடுகள் கண்காணிக்கப்பட்டு அவற்றைப் போக்கு வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, is the Hon. Minister aware of the fact that even in the Supermarket, Horlicks is not available?

THE HON. SRI V. RAMAIAH : It is not only in the Supermarket but also in other markets. Horlicks will be available only when sufficient quantity is produced. But now there is some shortage and we are trying to see that it reaches the largest number of people, as far as possible.

திரு. சா. கணேசன் : சூப்பர் மார்க்கெட் ஆரம்பித்த காரணத் தால், குழந்தைகள் உணவுப் பொருள்களான அமுல், கிளாக்ஸோ போன்றவை மாவட்டங்களுக்கு அனுப்பப்படாமல் அவ்வளவும் சூப்பர் மார்க்கெட்டுக்கே அனுப்பப்படுகின்றன என்ற புகாரையும், சூப்பர் மார்க்கெட்டில் குழந்தைகள் உணவுப் பொருள் வாங்க வேண்டுமென்றால் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் பண்டங்கள் வாங்கவேண்டுமென்ற முறை இருப்பதால் ஏழை மக்கள் கஷ்டப் படுகிறார்கள் என்பதையும் அரசாங்கம் உணருமா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமையா : ஜில்லாக்களுக்கு அனுப்பப்படக் கூடிய குழந்தை உணவுப் பொருள்கள் சூப்பர் மார்க்கெட்டுக்கு அனுப்பப்படவில்லை. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எவ்வளவு 'கோட்டா' உண்டோ அது கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. சூப்பர் மார்க்கெட்டுக்குக் கொஞ்சம் அதிகமான கோட்டா வாங்கி விநியோகம் செய்யப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சூப்பர் மார்க்கெட்டில் ஏராளமான ஹார்லிக்ஸ் இருக்கிறது என்ற அனுமானத்துடன் ஏராளமான தாய் மார்கள் 2, 3 பர்லாங் தூரத்திற்கு க்யூவில் 3 மணி நேரம், 4 மணி நேரம் காத்திருந்து கடைசியில் ஹார்லிக்ஸ் கிடைக்காமலே திரும் பக் கூடிய நிலை இருக்கிறது. முதலிலேயே இவ்வளவுதான் ஸ்டாக் இருக்கிறது என்ற அளவைத் தெரிந்து அதை முதலிலேயே தெரியப் படுத்தி விட்டால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படாது என்ற வகையில் அவ்வாறு தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா : ஹார்லிக்ஸ் மட்டுமல்ல, மற்ற எல்லாப் பொருள்களும் வாங்குவதற்காக கியூவில் மக்கள் நிற்கிறார் கள். சூப்பர் மார்க்கெட்டில் மக்களுக்குள்ள நம்பிக்கையையே இந்த க்யூ காட்டுகிறது.

திரு. எஸ். ராமசாமி நாயுடு : குடும்பக் கட்டுப்பாடு திட்டம் இப்போது நடைபெற்று வருவதன் காரணமாக குழந்தை உணவுப் பொருள்களில் தேவை எவ்வளவு விகிதாசாரம் குறைந்திருக் கிறது?

கனம் திரு. வெ. ராமையா : அது ஒன்றும் இதிலே 'ரிஃப்ளெக்ட்' ஆகவில்லை.